## 9

## வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# பணப் பிரச்சனைகளை சரிசெய்தல்

*உங்களுக்கு திருமணமாகிவிட்டால், உங்களுக்கும் உங்கள் மனைவிக்குமிடையே எப்போதாவது பணவிஷயங்களில் மோதல்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. வேதாகமக் கூற்றினைச் சார்ந்தது போலவே,[1] பணம்தான் குடும்பத்தின் எல்லாவித பிரச்சனைகளுக்கும் காரணமாயிருப்பதை நாம் காண இயலும்,[2] இதோ, அதற்கான சில உதாரணங்கள்:*

*(1) ஒரு தம்பதியினர் போதிய அளவு பணம் சம்பாதிக்க இயலாதவர்களாயிருக்கக்கூடும். அதனால், தங்களுக்கு தேவையானவற்றை வாங்க முடியவில்லை என எண்ணி விசனப்படுகிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் ஏழ்மையிலிருப்பதால், நலமுடன் வாழ்வதற்கு தேவையானவற்றை ஏற்பாடு செய்வதற்காக கணவன் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட வேலைகளில் பணிபுரிய வேண்டியிருக்கிறது. அதன் விளைவாகத் தன் மனைவியோடு கழிப்பதற்கு நேரமே கிடைக்காமற் போய்விடுகிறது.*

*(2) ஒரு தம்பதியினர் ஏராளமாய் செலவழித்து விட்டதன் விளைவாக கடனில் ஆழமாய்ச் சிக்கிக் கொண்டு, கட்டவேண்டிய பணத்தைக் கட்டமுடியாமற் போகலாம், அப்போது அவர்கள், தேவையில்லாததையெல்லாம் வாங்கிப் போட்டு விட்டதாக ஒருவர்மீது ஒருவர் குற்றம் சாட்டுபவர்களாயிருக்கக்கூடும். குடும்பத்தை காப்பாற்ற கையாலாகாத ஒருவரை ஏன்தான் திருமணம் செய்து கொண்டோமோ என்று அவள் யோசனை செய்து சத்தம்கூட போட்டிருக்கக்கூடும். நண்பர்களிடத்திலும், உறவினர்களிடத்திலும் கெஞ்சவேண்டிய அளவிற்கு கேவலமான நிலை தங்களுக்கு வந்துவிட்டதே என இருவருமே கவலைபட்டுக் கொண்டு தூக்கமற்ற இரவுகளைக் கழிப்பவர்களாயிருக்கலாம்.*

*(3) ஒரு தம்பதியினர், பொருளாதாரத்தில் செழித்திருப்பதாகத் தோற்றமளிப்பதுண்டு, ஆயினும் ஓர் முடிவே இல்லாத உலகப்பற்று எனும் சுற்று வளையத்தினுள் சிக்கிக் கொண்டிருப்பார்கள். எத்தனைதான் சம்பாதித்தாலும் அதைவிட அதிகமாய் ஆசைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். மகிழ்ச்சியென்பது கைக்கு எட்டும் தூரத்திலிருந்த போதிலும், திருப்தியாகுமளவிற்கு போதுமான சம்பத்துக்கள் அவர்களுக்கு ஒருபோதும் கிட்டுவதில்லை, உலகப் பொருள் மீது அவர்கள் கொண்டிருக்கும் வெறியினால், மணவாழ்வை நிலைக்கச் செய்யும் மானிட பண்புகளை அவர்கள் மறந்து போகக் கூடும். அவர்களது உலக சம்பத்துக்கள் பெருகப் பெருக, அவர்களது அன்போ குறுகிப் போய், முடிவில் மறைந்தே போய் விடலாம்.*

*இந்தப் பிரச்சனைகள் அனைத்துமே மணவாழ்வின் உறவுமுறைகளை*

*பாதிக்கின்றன. பணப் பிரச்சனைகளைக் குறித்து ஓர் தம்பதியினர் எவ்வளவு அதிகமாய் கவலைப்படுகின்றார்களோ அந்த அளவிற்கு, ஓர் வெற்றியுள்ள மணவாழ்வை அவர்கள் கட்டியெழுப்புவதற்கான கால அவகாசமும், சக்தியும் குறைந்து போய்விடும். பணவிஷயத்தில் ஒருவருக்கொருவர் உள்ள மனவருத்தமானது, கரையான்கள் ஒரு வீட்டின் சட்டங்களையெல்லாம் தின்று போடுவதுபோல, உங்களது மணவாழ்வினைச் சேர்த்து பிணைத்திருக்கும் அன்பினைத் தின்று போடும், அதன் விளைவாக, வெளித்தோற்ற அன்பாகிய வெறும் ஒரு கூட்டைத்தவிர வேறொன்றுமே மீதமிருக்காது, பணப் பிரச்சனைகள் திருமணங்களை அழித்துவிடலாம்.*

## பணத்தைக் குறித்த வேத போதனை

*வேதாகமத்தின் தத்துவங்களைக் கொண்டு பணப்பிரச்சனைகளைத் தீர்ப்பது எப்படி? பணமும் திருமணமும் என்பது பற்றி வேதம் போதிப்பது என்ன?*

### *கிறிஸ்தவர்கள், பிழைப்பிற்கென்று உழைத்திடல் வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 4:11)*

*பிழைப்புக்கு வழிசெய்வதற்கு கிறிஸ்தவர்கள் தங்கள் "சொந்தக்கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று" வேதாகமம் போதிக்கிறது (1 தெசலோனிக்கேயர் 4:11; எபேசியர் 4:28 காண்க). ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால், சாப்பிடுவதற்கு அவனுக்கு உரிமையே இல்லை (2 தெசலோனிக்கேயர் 3:10 காண்க). தங்களது குடும்பத்தைத் தாங்காதவர்கள் விசுவாசத்தை மறுதலித்தவர்களும் அவிசுவாசிகளிலும் மோசமானவர்களாய் இருக்கிறார்கள் (1 தீமோத்தேயு 5:8). பிழைப்பிற்கென்று உழைக்க மறுக்கும் நபர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும், தேவைப்பட்டால் அவர்கள் மீது சபையார் ஒழுங்கு நடவடிக்கையெடுக்கவும் வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 3:6-15). ஆகவே, உழைப்பதற்கு திராணியுள்ள கிறிஸ்தவர்கள், வேண்டுமென்றே, அரசாங்கம் தங்கள் பிழைப்புக்கென்று தரும் நிதி உதவியால் வாழ விரும்புகிறவர்களாகவோ அல்லது பிறரது தர்மசகாயத்தை தங்களுக்கு நியாயமற்ற வகையில் சாதகமாக்கிக் கொள்பவர்களாகவோ இருக்கமாட்டார்கள்.[3]*

### *கிறிஸ்தவர்கள், வழங்கும் திறன் பெற்றவர்களாய் இருப்பதற்காக உழைக்கிறார்கள் (எபேசியர் 4:28)*

*கிறிஸ்தவர்களை, பிறருக்கு கொடுத்து உதவ வல்லவர்களாக்குவதுதான் உழைப்பின் நோக்கங்களில் ஒன்று என வேதம் போதிக்கிறது (எபேசியர் 4:28). மக்கள் தம்மையும் தமது குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக வேலைசெய்ய வேண்டும், எனினும், தேவையிலிருப்போருக்கு கொடுக்கக் கூடியவர்களாயிருப்பதற்காகவும் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது, சேர்ந்து வாழ ஆரம்பித்ததிலிருந்தே, கணவனும் மனைவியும், தங்களிடத்தில் உள்ளவைகளிலிருந்து கர்த்தருடைய ஊழியத்திற்கு தாராளமாய்க் கொடுப்பதற்கு நாட்டமுடையவர்களாயிருக்க வேண்டும்.*

***பணம் சம்பாதிப்பது கிறிஸ்தவனின் முக்கிய இலட்சியமல்ல (மத்தேயு 6:19அ)***

*வேதாகமமானது உலகப்பற்றிற்கு எதிராக எச்சரிக்கை விடுப்பதோடு, பணம் சம்பாதிப்பதும், பணத்தைச் சேர்ப்பதும் ஓர் தம்பதியரின் முக்கிய இலட்சியமாயிருக்கலாகாது என்றும் போதிக்கிறது. "பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்துவைக்கவேண்டாம்" என்றார் இயேசு (மத்தேயு 6:19அ). "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"[4] என்று அவர் எச்சரித்தார், "பண ஆசை எல்லா தீமைக்கும்" மூலகாரணமாயிருக்கிறது என்று பவுல் எழுதியதோடு (1 தீமோத்தேயு 6:10), கிறிஸ்தவர்கள் உலக சம்பத்துக்களுக்காக ஆசைப்படவேண்டாம் எனவும் வலியுறுத்தியிருக்கிறார்.[5] நமது உலகில் அநேகர் செல்வத்திற்காக ஓட்டமாய் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களோ, அந்த ஓட்டப்பந்தயத்தில் நுழைய மறுத்திட வேண்டும்!*

*இவ்வாறு கூறுவதால், கிறிஸ்தவர்கள் ஏழைகளாயிருப்பதற்கென்றே சபதம் எடுத்துக் கொள்ள வேண்டுமென கிறிஸ்து விரும்புகிறார் என்று பொருளாகாது. ஒரு கிறிஸ்தவ தம்பதியர் சொந்தமாக ஒரு வீடு, சாமான்கள், துணிமணிகள் ஆகியவற்றை வைத்திருக்கலாம். உங்கள் பிள்ளைகளுக்காக நீங்கள் சேர்த்து வைப்பதோடு கூட, உங்களது எதிர்காலத்திற்காகவும் முதலீடு செய்யலாம், பணத்தை சேமிக்கலாம். ஆயினும் உங்களது அழைப்பிற்கு நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டுமானால், உலக சம்பத்துக்களுக்காக* நியாயமான *ஓரளவே செலவழிக்க வேண்டும்,[6] காசேதான் கடவுளடா என்கிற கலாச்சாரப் போக்கினை நீங்கள் ஒத்துக் கொள்ள முடியாது.*

***கிறிஸ்தவர்கள் செல்வத்தைப் பற்றிய சரியான மனோபாவம் உடைவர்களாயிருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 6:9, 10)***

*ஆரம்ப காலத்து கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் ஏழைகளாயிருந்தனர், ஆனால் எல்லோருமே ஏழைகளாயிருக்கவில்லை.[7] "பண ஆசை" எல்லாவிதமான தீமைகளுக்கும் மூலகாரணமாயிருப்பதால் பணக்காரராவதற்கு ஆசைப்படாதீர்கள் (1 தீமோத்தேயு 6:9, 10) என பவுல் கூறிய பின்னர், ஏற்கனவே பணக்காரராயிருந்த கிறிஸ்தவர்ககளுக்கான சில வழிமுறைகளை அவர் எடுத்துரைக்கிறார். 1 தீமோத்தேயு 6:17-19ன்படி அவர்கள், (1) இறுமாப்படையக் கூடாது; (2) "நிலையற்ற ஐசுவரியத்தின் மேல்" நம்பிக்கை வைக்கக் கூடாது; (3) தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்; (4) எல்லாமே தேவனிடத்திலிருந்துதான் வருகிறது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்; (5) தங்கள் செல்வத்தினால் நன்மை செய்கிறவர்களாக இருக்கவேண்டும். இந்த வழிமுறைகளை பின்பற்றுவதன்மூலம் அவர்கள் வருங்காலத்திற்காக தங்களுக்கு நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக வைப்பதோடு "நித்திய ஜீவனையும் பற்றிக் கொள்ளுவார்கள்."*

***கிறிஸ்தவர்கள் தங்கள் பணத்திற்கு உக்கிராணக்காரராயிருக்கின்றனர் (1 பேதுரு 4:10)***

*கிறிஸ்தவர்கள் தங்களது பூமிக்குரிய உடைமைகளுக்கு உக்கிராணக்காரர்களாயிருக்கிறார்கள் என வேதாகமம் போதிக்கிறது (1 பேதுரு 4:10). இருக்கின்ற எல்லாமே உண்மையிலேயே தேவனுக்கு*

உரியவைகளாயிருக்கின்றன.[8] எனவே நீங்கள் வைத்திருக்கும் ஒவ்வொன்றும் உண்மையிலேயே தேவனுடையவைகளாய் இருக்கின்றது. இந்த உடைமைகளை தேவனுடைய மகிமைக்கென்று பயன்படுத்திக் கொள்ளும்படி கொஞ்சகாலம் அவை உங்களுக்கு இரவலாகத் தரப்பட்டிருக்கின்றன. உங்களுக்கு சொந்தமானவை என்று நீங்கள் சொல்லிக் கொள்ளும் பொருட்களுக்கெல்லாம் நீங்கள் கர்த்தருக்காக செயல்படும் ஓர் உக்கிராணக்காரனாகவும், அவைகளைக் கொண்டு நீங்கள் என்ன செய்தாலும் அதைக் குறித்து அவருக்கு கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறீர்கள்.[9] ஆகவே, ஞாயிற்றுக்கிழமையன்று கர்த்தருக்கு நீங்கள் கொடுக்கும் காசு மட்டுமே "கர்த்தருடைய காசு" அல்ல; உங்களது ஒட்டுமொத்த பணமுமே கர்த்தருடையதுதான். நீங்கள் எதற்கேனும் செலவழிக்க முற்படுகையில் அவரது வளங்களைக் கொண்டு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென ஆண்டவர் விரும்புகிறார் என்பதை சிந்தியுங்கள்.

## பணத்தைக் கையாளுவதற்கான நடைமுறை ஆலோசனைகள்

இந்த வேதாகம தத்துவங்களிலிருந்து, புதிதாய் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு உதவிகரமாயிருக்கும் வகையில் நாம்பெறும் நடைமுறை ஆலோசனைகள் என்ன?

### பணம் உங்கள் வேலையைத் தீர்மானிக்க விடாதீர்

ஒரு வேலையையோ அல்லது தொழிலையோ நீங்கள் தெரிவுசெய்யும்போது, அது எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியும் என்ற ஒரே அடிப்படையில் - ஒருவேளை, அந்த முக்கிய அடிப்படையில் - இருத்தலாகாது. எவ்விதத்திலாவது உங்களது குடும்பம் வாழ்வதற்கு போதுமான அளவிற்கு நீங்கள் சம்பாதித்துதான் ஆக வேண்டும் என்பது உண்மையே. ஆயினும் அதில் எவ்வளவு சம்பளம் கிடைக்கும் என்பதை மட்டுமே கருத்தில் கொண்டு உங்களது வேலையை நீங்கள் தெரிவு செய்வீர்களேயானால் அது உங்களுக்கு பொருளாசையை உருவாக்கிவிடலாம் அல்லது உங்களது பொருளாசை மனோபாவத்தை பிரதிபலித்திடலாம். ஒரு வேலையையோ அல்லது தொழிலையோ நீங்கள் தேர்ந்தெடுக்கும் போது கருத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயங்கள் இன்னுமுண்டு. "கர்த்தரை சேவிப்பதற்கு எனது திறமைகளை நான் எவ்வாறு சிறப்பாக பயன்படுத்துவது?" "எனது குடும்பத்தாரின் ஆன்மீக ஆவிக்குரிய நலனுக்கு எது சிறப்பானதாயிருக்கும்?" என்று உங்களை நீங்கள் கேட்டுப்பார்க்க வேண்டும்.

### அதிகச் செலவு செய்யாதீர்

அதிகமாய் செலவு செய்து விடாதபடிக்கு நீங்கள் கவனமாயிருக்க வேண்டும். *The World Evangelist,* ன் நெடுநாளைய ஆசிரியரான பேசில் ஓவர்டன் அவர்கள், "உங்கள் செலவு, வரவை மிஞ்சுமானால் பராமரிப்பில் நீங்கள் தோற்றுப்போவீர்கள்," என்று சொல்லிக் கொண்டிருப்பார். பணமதிப்பு அட்டை (credit card) வழங்கும் கம்பனிகள், கடனில் மூழ்குவதற்கு எளிதாக வழி செய்கின்றனர்; அதன் விளைவாக உங்கள் குடும்பம் பாதிக்கப்படுகிறது.

சபையின் அங்கத்தினர்கள் பெருத்த கடன் உள்ளவர்களாய், கொடுக்க வேண்டிய அளவிற்கு காணிக்கையளிக்க இயலாதவர்களாயிருக்கும்போது அதன் காரணமாக சபையும் பாதிக்கப்படுகிறது.

சில சமயங்களில், வாலிப மக்களின் எதிர்பார்ப்புகள் மிகவும் பெரிதாயிருப்பதனால் அவர்களுக்கு பிரச்சனை ஏற்படுகிறது, அவர்கள் வருடக்கணக்கில், பெற்றோரது செலவில் நல்ல நிலையில் வாழ்ந்தவர்களாயிருக்கக் கூடும். திருமணமானதும், அவர்கள் அந்த நிலையிலேயே வாழ்க்கையைத் தொடர நினைக்கிறார்கள், தாங்கள் விரும்பியதையெல்லாம் அடைவதற்காக அவர்கள் கடனில் விழுகிறார்கள். அதன் காரணமாக, மணவாழ்க்கை பாதிப்படைகிறது! இதற்கு ஒரே தீர்வு, உங்களிடம் இல்லாத பணத்தை செலவழிக்காமலிருப்பதுதான். வீட்டிற்கான ஏதாவதொரு பொருளுக்கு நீங்கள் பணம் செலுத்தக் கூடிய நிலையில் இல்லாதபோது அதனை வாங்குவதற்கு நீங்கள் கடன்படவேண்டாம். ஒவ்வொரு வாரமும் வரவிருக்கும் பணத்தை நீங்கள் எவ்வாறு செலவிட உத்தேசிக்கிறீர்கள் என்பதைக் குறிக்கும் ஓர் வரவுசெலவுத்திட்டத்தை எழுதிவையுங்கள். பட்ஜெட் போடுவது என்பது ஓர் தெளிவுபடுத்துகின்ற அனுபவமாயிருக்கும். எவற்றிற்கெல்லாம் பணம் செலவிடவேண்டுமென்று பட்டியல் போடுதல், அவசியமில்லாத ஏதாவதொன்றினை வாங்கிட அவசரமாய் முடிவெடுப்பதற்கு முன் உங்களை யோசிக்க வைப்பதாயிருக்க வேண்டும்.

**செலவிடுதல் பற்றி சேர்ந்தே முடிவெடுங்கள்**

ஒன்று சேர்ந்து தான் செலவுகளைப் பற்றி முடிவெடுக்க வேண்டும். மணவாழ்க்கையில், ''அவரது பணம்,'' ''அவளது பணம்'' என்பது கிடையாது அனைத்துமே - சட்டப்படியாகவும், வேதவசனப்படியாகவும் - இருவருக்கும் சொந்தமானவையாகும். குடும்பத்திற்குரிய பணத்தை, குடும்பத்திலுள்ள மற்றவர்களைக் கருத்தில் கொள்ளாமல் செலவு செய்வதற்கு யாருக்கும் உரிமையில்லை. கணவன் குடும்பத்திற்கே தலைவனாயிருந்த போதிலும், பணத்தை எவ்வாறு செலவு செய்ய வேண்டுமென்பதில், மனைவின் அபிப்பிராயத்தையோ அல்லது தேவைகளையே கருத்தில் கொள்ளாமல், தன்னிச்சையாக முடிவெடுப்பதற்கு அவருக்கு உரிமையில்லை.

ஒரு கால கட்டத்தில் செய்யப்பட வேண்டிய முக்கிய செலவுகளைப் பற்றி தம்பதியர் சேர்ந்துதான் முடிவெடுக்கவேண்டும்.[10] சில்லறையாய் பொருட்கள் வாங்கும் போது, திட்டமிடப்பட்ட ஒவ்வொன்றிற்கும் தோராயமாக எவ்வளவு செலவழிக்கப்பட வேண்டுமென்பதை கணவனும் மனைவியும் தெரிந்திருந்தால் போதுமானது.

அத்தோடு இந்த முடிவெடுக்கின்ற வேலையில் தேவனும் பங்கு கொள்ளுகிறவராயிருக்க வேண்டும். ஜெபத்தில் அவரது வழிநடத்துதலை நாடவேண்டும். நீங்கள் செலவு செய்வதெல்லாம் அவருடைய பணம் தானே.

**செலவுகளைக் குறித்த உங்களது தீர்மானங்கள் ஆன்மீக மதிப்பீடுகளை வெளிக்காட்டுவதாய் இருக்கட்டும்**

செலவுத்தீர்மானங்கள், உலகப்பிரகாரமான மதிப்பீடுகளையல்ல, ஆன்மீக மதிப்பீடுகளையே வெளிக்காட்டவேண்டும். கிறிஸ்தவராகிய

நீங்கள் கிறிஸ்துவை சேவிப்பதையே உங்களது முக்கிய நோக்கமாய் கொண்டவராயிருக்கின்றபடியினாலும், உங்கள் உடைமைகளுக்குகெல்லாம் நீங்கள் வெறும் ஓர் உக்கிராணக்காரன் தான் என்றும், அவைகளை தேவனுடைய மகிமைக்காக பயன்படுத்த கடமைப்பட்டவனென்றும் உணர்ந்தவராயிருப்பதினாலும், செலவுகளைப் பற்றிய ஒவ்வொரு தீம்மானத்திலும் நீங்கள் எச்சரிக்கையான எண்ணமுள்ளவர்களாயிருப்பீர்கள், "இது, தேவனுடைய மகிமைக்காக நான் எடுக்கும் சிறந்த தீர்மானமாயிருக்குமா?'' என்ற கேள்வியை உங்களிடமே கேட்டுப்பாருங்கள். அதற்கான பதில் எப்போதுமே எளிதாயிருக்காது, என்றாலும் விடைகாண வேண்டிய விஷயம் இது.

உங்களது பணப் பயன்பாடு ஆன்மீக மதிப்பீடுகளை வெளிக்காட்டுகின்ற ஒரு விதம், "அடுத்தவர்களையே போட்டியாகப் பார்க்கும்'' உலகத்தாருடைய போக்கை நீங்கள் ஒதுக்கித் தள்ள வேண்டும். அதாவது, உங்களைச் சுற்றியுள்ளவர்களைவிட பெரிதானவைகளையும் சிறந்த சம்பத்துகளையும் வாங்கி வைத்து, மேலான அந்தஸ்துடையவர்களாய் மாறிட நினைக்கலாகாது. தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு உக்கிராணக்காரனாகிய நீங்கள், "கர்த்தருடைய பணத்தை'' இருப்பதிலேயே சிறப்பான வகையில் செலவிடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**நிலையானவைகளுக்காக பணத்தை செலவிடுங்கள்**

திருமணமானவுடனே நீங்கள் உலகத்தைப் பார்த்து, ''நாங்கள் பெரியவர்களாகிவிட்டோம்'' என்று சொல்லிக்கொள்ளுகிறீர்கள். பெரியவர்களாகிய நீங்கள், பணத்தைச் செலவிடுகின்றன விதத்தில் சிறுபிள்ளைகளைப் போல் நடந்து கொள்ளாமலிருக்கப் பாருங்கள், ஒரு சிறுபிள்ளையிடம் காசு கொடுத்தால், அது உடனே ஓடிப்போய் தின்பண்டம் வாங்கி செலவழித்து விடும்; எதிர்காலத்திற்கு என்னவோ அதைப் பற்றிய எண்ணம் இல்லாமல், ''இங்கே இப்போ'' என்னவோ அதைப் பற்றியே சிந்திக்கும். பெரியவர்களாயிருப்பதால் நீங்கள் அத்தகைய சிறுபிள்ளைத்தனமான பழக்கங்களைத் ஒதுக்கிவிட்டு, சிறப்பாய் நிலைத்திருக்க கூடிய வழியில் உங்கள் பணத்தை முதலீடு செய்ய வேண்டும். எவ்வாறு?

(1) *பொருட்களை விலைக்கு வாங்குவதில் புத்திசாலித்தனமாக முடிவெடுங்கள்.* மிகச்சிறந்ததை வாங்கப்பாருங்கள்; உங்கள் பணத்திற்கு அதிகப் பெருமானமானதை வாங்குங்கள். நீங்கள் வாங்கும் பொருளானது எவ்வளவு காலம் உழைக்கும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.[11]

(2) *உங்களது பிந்திய வருடங்களுக்காக திட்டமிடுங்கள்.* நீங்கள் முதிர்வயதாகும்போது உங்களுக்கு ஆதரவாயிருக்கும் வகையில், உங்களது வருமானத்தில் ஒரு பகுதியை, திருமணமானது முதற்கொண்டு, நீங்களும் உங்கள் துணையாளியும் தவறாமல் சேமித்துவரவேண்டும்.

(3) *கர்த்தருக்கு தாராளமாய்க் கொடுங்கள்.* சபையின் ஊழியத்திற்கென்று நீங்கள் கொடுப்பதன் வாயிலாக, நீங்கள், ''பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறீர்கள்'' (மத்தேயு 6:19அ; பார்க்கவும்). "நீங்கள் அவைகளை உங்களோடுகூட கொண்டுபோக முடியாது, ஆனால் முன் கூட்டியே அவைகளை அங்கு அனுப்பிவைத்திட முடியும்'' என்றார் ஒருவர்.

*கர்த்தருடைய ஊழியத்தை முன்னேற்றுவதற்காக நீங்கள் கொடுக்கும்போது நித்தியத்திற்காக நீங்கள் முதலீடு செய்கிறீர்கள்!*

## முடிவுரை

*ஒரு தம்பதியரின் பொருளாதாரக் குறிக்கோள் எப்படியிருக்க வேண்டுமென்ற ஓர் பொருத்தமான சுருக்கத்தை ஜிம் ஹாக்கின்ஸ் தந்திருக்கிறார்:*

> *ஒரு திருமண உறவில் பொருளாதாரமானது ஆரோக்கியமானதாகவும், நிலையாகவும் இருக்க வேண்டுமென்ற குறிக்கோளில் முதலாவதாக, பணம் எவ்விதம் செலவிடப்படுகிறது என்பதில் எந்த ரகசியமும் இருக்கலாகாது. இரண்டாவதாக, ஒரு தம்பதியினருக்கு கடன் இருக்கிறதோ இல்லையோ, பணத்தை அவர்கள் சுயகட்டுப்பாட்டுடன் கையாளக் கூடியவர்களோ இல்லையோ ஒவ்வொரு தம்பதியினருக்குமே ஒரு வரவு செலவுதிட்டம் (பட்ஜெட்) அத்தியாவசியமாயிருக்கிறது. மூன்றாவதாக, தங்களது செலவழிப்புகளைப் பற்றி பேசிக் கொள்வதற்கு தம்பதியர் கற்றுக் கொள்ள வேண்டும். அதிமுக்கியமாக, தம்பதியர் தம் வாழ்விலே தங்களுக்குள்ள மதிப்பீடுகள் மற்றும் இலட்சியங்களின் அடிப்படையில் சிந்திப்பது புத்திசாலித்தனமாயிருக்கும். அப்போது இந்த வாழ்வில் (தங்களது) தாங்கள் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, தாங்கள் எதை விரும்புகிறார்களோ, அதை அடைவதற்கு ஒன்று சேர்ந்து உழைத்திடலாம்.*[12]

*நீங்களும் உங்கள் வாழ்க்கைத்துணையும் உங்கள் பணத்தை எவ்விதம் செலவிடுகிறீர்களோ அதன் மூலம் உங்களைக் குறித்தும் உங்கள் மணவாழ்க்கையைக் குறித்தும் நிறைய விஷயங்களை நீங்கள் வெளிக்காட்டுகிறீர்கள். என்றாலும், நீங்கள் பணத்தை எவ்வாறு செலவிடுகிறீர்கள் என்பதைவிட பணச் சிக்கல்களை எவ்விதம் சமாளிக்கிறீர்கள் என்பதுதான் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. நீங்கள், ஒருவர் மீது ஒருவர் அன்போடும், மதிப்போடும், தேவனை மகிமைப்படுத்துவதற்கென்றே எதையும் செய்யும் விருப்பத்தோடும் ஒன்றிணைந்து செயல்பட்டு பிரச்சனைகளை சரிசெய்திட மனமுள்ளவர்களாயிருந்தால், பணப்பிரச்சனை எதுவும் உங்கள் மணவாழ்க்கையை முறித்து விடாது.*

---

குறிப்புகள்

*[1]1 தீமோத்தேயு 6:10ன் படியாக, "பண ஆசை" தான் எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறதே ஒழிய, "பணம்" அல்ல. [2]"(அமெரிக்காவில்) பாதிக்குப் பாதி திருமணங்கள் விவாகரத்தில் முடிவதற்கான முக்கிய காரணமே பணவிஷயம்தான்" என்றொரு ஆதாரம் கூறுகிறது* (http://www.marriagemissions.com/money-problems-marriage-message-31/; Internet; accessed 24 October 2008). *[3]சில சமயங்களில் கிறிஸ்தவர்கள், தாங்கள் தவறேதும் செய்யாமலிருந்தும், பிறரது தயவினால் வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்பதும் உண்மையாயிருக்கிறது. [4]லூக்கா 12:15ல் "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று நமது மொழிபெயர்ப்பு கூறுகிறது.* NASB *மொழிபெயர்ப்பில் இது "பேராசை" என குறிப்பிடப்பட்டுள்ளது.*

[5]"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்" (1 தீமோத்தேயு 6:9). [6]ஒரு கிறிஸ்தவன், வீடு, கார், துணிமணி, ஆகிய உலகப் பிரகாரமான பொருட்களுக்காக அல்லது பொழுது போக்கிற்காக "நியாயப்படி" எவ்வளவு தொகையை செலவிடலாம்? அது சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. "பொருட்களுக்காக" இவ்வளவுதான் செலவிடவேண்டுமென்று யாருமே இன்னொருவரை நிர்ப்பந்திக்க முடியாது. ஒரு கிறிஸ்தவன் பொருள் வாங்கின்ற விஷயமானது அவனுக்கும் கர்த்தருக்கும் இடையிலான தீர்மானங்களாயிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருமே, பணத்தை எவ்வாறு செலவிடவேண்டுமென்பதை தேவவசனத்தின் அடிப்படையில் நிதானத்தோடு யோசனை செய்ய வேண்டும். [7]1 கொரிந்தியர் 1:26ன் படியாக, ஆரம்பகாலத்து கிறிஸ்தவர்களில் சிலரைத்தவிர "ஞானிகள் அநேகரில்லை," "வல்லவர்கள் அநேகரில்லை," "பிரபுக்கள் அநேகரில்லை." [8]சங்கீதம் 24:1; ஆகாய் 2:8; 1 நாளாகமம் 29:11-14ஐப் பார்க்கவும். மேலும் யாக்கோபு 1:17ஐயும் நடபடிகள் 17:25ஐயும் பார்க்கவும். தேவன்தான் "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிறவர்." [9]உக்கிராணத்துவத்தின் அடிப்படைக் கொள்கையானது, தாலந்துகளைப் பற்றிய உவமையில் போதிக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 25:14-30). "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்பட வேண்டும்" (1 கொரிந்தியர் 4:2). [10]பிள்ளைகள் வந்துவிட்ட பிறகு, அவர்களையும் கருத்தில் கொண்டு, முக்கிய தீர்மானங்களில் அவர்களையும் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது.

[11]இளம் வயதினர் தங்கள் கல்விக்காக செலவழிக்கப்படும் பணத்தினை, எதிர்காலத்திற்கான ஓர் புத்திசாலித்தனமான மூலதனமாகக் கருதக்கூடும். [12]Jim Hawkins, *Tarnished Rings* (Shippensburg, Pa.: Treasure House, 1993), 148.